RW 1- திரு.மோகன்ராஜ்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) நான் எந்த விலாசத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் கல்லாங்காடு, அம்மாபாளையம் ஆகும். திருமணத்திற்கு பின்னிட்டு நானும், எனது மனைவியும் அங்கு தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்திற்கு கார் அல்லது இருசக்கர வாகனத்தில் வந்தேனா என்றால் இருசக்கர வாகனத்தில் நான் மட்டும் தான் வந்தேன். திருமணத்திற்கு எனது மனைவி தரப்பில் சீர் வரிசைகள், நகைகள் செய்தார்கள் என்றால் கட்டில், பீரோ, நகைகள் செய்தார்கள். எனது வீட்டில் மனுதாரர் குடியிருந்தபோது இரவு நேரத்தில் யாரோ ஒருவர் மனுதாரரிடம் நகையை பறிப்பதற்காக வந்ததாக மனுதாரர் என்னிடம் சொன்னார் என்றால் இல்லை. உண்மையில் மனுதாரர் என்னிடம் சொன்னார், அதற்கு மனுதாரரிடம் நாங்கள் தான் பறிக்க சொன்னோம் என்று சொன்னேன் என்றால் சரியல்ல.

2) மனுதாரர் எனது வீட்டில் இருந்தபோது வீட்டு வேலை செய்தார் என்றால் ஆமாம். நான் தறி வைத்துள்ளேன் என்றால் இப்போது இல்லை. அப்போது இருந்தது. அப்போது தறி தொழிலிலும் எனக்கு உதவியாக இருந்தார் என்றால் இல்லை. வீட்டில் மட்டும் உதவியாக இருந்தார். நான், எனது மனைவி, எனது பெற்றோர்கள் கூட்டுக்குடும்பாக வசித்து வந்தோம் என்றால் ஆமாம். நானும், எனது பெற்றோரும் என்ன வேலை செய்ய சொன்னமோ அந்த வேலையை மனுதாரர் செய்து வந்தார் என்றால் வீட்டு வேலை மட்டும் தான் செய்து வந்தார். உண்மையில் நான் சொல்வது தவறு என்றாலும், தறி ஓட்டும் வேலை செய்தார் என்றால் சரியல்ல. தறி ஓட்டுவதற்கு ஆட்கள் இருந்தார்கள். வளைகாப்பிற்கான செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் பார்த்தார்கள் என்றால் ஆளுக்கு பாதி பார்த்தோம். உண்மையில் நான் சொல்வது தவறு என்றாலும், மனுதாரரின் பெற்றோர்கள் தான் செலவுகளை பார்த்தார்கள் என்றால் இல்லை.

3) பிரசவ செலவுகளை மனுதாரரின் பெற்றோர்கள் பார்த்தார்கள் என்றால் பரிசோதனை செலவு நான் பார்த்தேன். பிரசவ செலவை மனுதாரரின் பெற்றோர்கள் பார்த்தார்கள். நான் சொல்வது பொய் என்றாலும், அனைத்து செலவுகளையும் மனுதாரரின் பெற்றோர்கள் தான் பார்த்தார்கள் என்றால் சரியல்ல. குழந்தை தற்போது என்ன படித்து வருகிறார் என்றால் 11 ஆம் வகுப்பு ஆகும். நாங்கள் பிரிந்து உள்ளதால் குழந்தைகளை பார்க்கவில்லை என்றால் நான் பார்த்து வருகிறேன். 3 வருடம் வீட்டிற்கு சென்று பார்த்து வருகிறேன். ஒரு மாதம் அல்லது இரண்டு மாதத்திற்கு ஒரு முறை சென்று பார்ப்பேன். ஒரு சில முறை சண்டை

போட்டு வீட்டில் பூட்டிவைத்து விட்டு பார்க்க விடமாட்டார்கள். உண்மையில் நான் சொல்லும் விபரம் பொய் என்றால் சரியல்ல. 20.02.2019 ஆம் தேதியிட்ட எனது வழக்கறிஞர் அறிவிப்பில் எனது கட்சிக்காரர் உங்களை பார்க்க பலமுறை வந்தும் அவரது குழந்தையை பார்க்க மறுத்துள்ளீர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலத்தில் 1 ஆம் மனுதாரர் என்னை பிடிக்காமல் சென்றுவிட்ட பிறகு நான் ஒருபோதும் சந்திக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்விற்கும், தற்போது குறுக்கு விசாரணைக்கும் மற்றும் முதல் விசாரணைக்கும் வெவ்வேறு பதில்கள் அளித்து முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சேர்ந்து வாழ வேண்டும் என்று மனுதாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த மனுவின் சமரச அடிப்படையில் நானும், மனுதாரரும் மனுதாரரின் பெற்றோர் வீட்டில் சேர்ந்து வாழ்ந்தோம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான், மனுதாரரின் பெற்றோர்கள் இல்லாத சமயத்தில் மனுதாரரை அடித்து காயப்படுத்தினேன் என்றால் பேசவே இல்லை. வழக்கிற்காக சேர்ந்து வாழ்வதாக கூறிவிட்டு மனுதாரரை அடித்து காயப்படுத்திவிட்டு தன்னிச்சையாக குடும்ப வாழ்க்கையை விட்டு பிறிந்து சென்றுவிட்டேன் என்றால் இல்லை.

5) எனக்கு காங்கேயம் வட்டம், சின்னமுத்தூர் கிராமத்தில் 50 செண்ட் இடம் உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் அந்த 50 செண்ட் இடத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். அந்த **ஆவணம் ம.சா.ஆ.10** ஆகும். அதன் மதிப்பு தற்போது ரூ.50 இலட்சத்திற்கு மேல் இருக்கும் என்றால் இல்லை, ரூ.10 இலட்சம் வரும். எனது அப்பா வகையில் பிதுர்ராஜித சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 ஆவணத்தின்படி மொத்தம் 2.24 ஏக்கர் எனது தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றால் ஆமாம். அதை நாங்கள் கூட்டாக அனுபவித்து வருகிறோம் என்றால் இல்லை. நானும், எனது தம்பியும் அனுபவித்து வருகிறோம். ம.சா.ஆ.9 ஆணத்தில் எனது அப்பா எனக்கு தானம் செட்டில்மன்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் அனைத்தும் பல்லடம், அம்மாபாளையம் கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். அதன் மதிப்பு சுமார் ரூ.1 கோடி இருக்கும் என்றால் சரிதான்.

6) எனக்கு பாம்பு கடித்தது சம்மந்தமாக மருத்துவ ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரரின் பெற்றோருக்கு 5 ½ ஏக்கர் பூமி உள்ளது என்று சொல்லியுள்ளதற்கு அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். 10 தறி இருந்தால் தோராயமாக ரூ.30,000/- வருமானம் வரும் என்றால் அவ்வளவு வராது. ரூ.15,000/- வரும். எத்தனை தறி வைத்திருந்தேன் என்றால் 12 தறி ஆகும். தற்போது வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால்

சரிதான். இரண்டு வீடுகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளேன். உண்மையில் 15 வீடுகள் கட்டி வாடகைக்குவிட்டுள்ளேன் என்றால் இல்லை. இரண்டு வீடு தான். அதன் மூலம் மாத வருமானம் ரூ.30,000/- வருகிறது என்றால் இல்லை. இரண்டு வீட்டில் எவ்வாறு ரூ.30,000/- வரும். அதுபோக நான் விவசாயம் செய்து வருகிறேன், எனது பூமியில் கிணற்று பாசனம் உள்ளது, அதை வைத்து சோளம் பயிரிட்டு வருமானம் பார்த்து வருகிறேன் என்றால் மழை பெய்தால் பயிர் செய்வேன். மாடு எத்தனை வைத்துள்ளேன் என்றால் மாடுகளை மேய்க்க முடியாததால் விற்றுவிட்டேன். உண்மையில் நான் சொல்லும்விபரம் தவறு என்றாலும், விவசாயம் மூலமாகவும், தறி மூலமாகவும் நல்ல வருமானம் பெற்று வருகிறேன் என்றால் சரியல்ல.

7) நான் எனது மனைவியை விட்டு பிறிந்த பிறகு தற்போது வரை எனது மனைவிக்கோ, எனது மகளுக்கோ எந்த பொருள் உதவியும் செய்யவில்லை என்றால் ஆமாம். எனது மகள் எங்கு படிக்கிறார் என்றால் ராஜா மெட்ரிக்குலேசன் பள்ளி ஆகும். எனது மகளின் பள்ளிச்செலவுகள் அனைத்தையும் மனுதாரர் தான் பார்த்து வருகிறார் என்றால் ஆமாம்.

(மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2025.05.29 16:15:34 +0530

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.